
# C.S.I TAMIL CHURCH - OMAN

# “பாலைவன மன்னா”




மன்னா – 10 அக்டோபர் 2020 பிரதி – 7



# ஆயர் மடல்



இறை இயேசு கிறிஸ்துவுக்குள் அன்புக்குரியவர்களே!

ஆண்டவர் நமக்கு அருளியிருக்கும் அக்டோபர் மாதத்திற்காக நன்றி சொல்வோம். வாழ்வின் பாதையில் ஏற்படும் கடின அனுபவங்கள் நமக்கு தரும் நல்ல பாடங்கள் என்னும் உணர்வுகளோடு வாழ்வைத் தொடர்வோம்.

இருதயம் என்னும் தலைப்பில் நாம் சிந்திக்கும் இம்மாதம் நமது இருதயத்தைச் சோதித்து சீர்ப்படுத்திக்கொள்வது சிறந்ததாக அமையும்.

“தேவனே என்னை ஆராய்ந்து என் இருதயத்தை அறிந்துகொள்ளும். என்னை சோதித்து என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும். வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து நித்திய வழியிலே என்னை நடத்தும்” (சங்கீதம் 139:23,24).

இறை அர்ப்பணத்தோடு வாழ்க்கை பயணம் தொடர்வோம்.

கொடிய வைரஸ் தாக்கம் நீங்கவும் நமது குடும்பங்கள் பாதுகாக்கப்படவும், குறிப்பாக பெற்றோர், குழந்தைகள் பாதுகாப்புக்காகவும் ஜெபித்துக் கொள்வோம்.

நமது திருச்சபையின் மூலம் நடைபெறும், தினமும் இறைவேண்டல் காலை 9 மணி முதல் 10 மணி வரை, ஒவ்வொரு வியாழக்கிழமை காணொளி ஜெபக்கூட்டம் இரவு 9 முதல் 10 வரை, வெள்ளிக்கிழமை பரிசுத்த ஆராதனை அனைத்து காணொளி நிகழ்வுகளிலும் குடும்பமாய் பங்கெடுக்க ஆலோசனை கூறுகிறேன்.

ஆலயம் திறக்கப்படவும், ஆராதனைகள் நடத்தப்படவும், இணைந்து இறைநாமத்தை மகிமைப்படுத்தவும் ஆண்டவர் ஆற்றல் வேண்டி மன்றாடுவோம். இந்திய தேசம், நாம் பணியாற்றும் ஓமான் தேசம் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீளவும், அனைத்து மக்களின் நல்வாழ்வுக்காகவும் பாரத்தோடு ஜெபித்துக்கொள்வோம்.

நலம்தரும் நல்ல மாதமாக அமைய அன்புடன் வாழ்த்துகிறேன். இறை ஆசி உங்களை ஆட்கொள்வதாக ஆமென்!

**அன்புடன் போதகர்,**
**Rev. Dr. N. ஜெசின்**

# ஆயர் அருளுரை

## இருதயம் காக்கப்படவேண்டும்

கிறிஸ்துவில் பிரியமானவர்களே! இம்மாத தலைப்பு இருதயம். மனித உடலில் மிக முக்கியமான அவயவம் இருதயம். ஒவ்வொரு மனிதனின் இருதயமும் அவன் ஒரு கைப்பிடி அளவு இருக்கும் என்று கூறப்படுகிறது. நமது இருதயம் காக்கப்படவேண்டும் என ஆண்டவர் விரும்புகிறார். எனவே நீதிமொழிகள் புத்தகம் இருதயத்தைக் குறித்து கூறும் சிந்தனைகளை இந்நாளில் செய்தியில் சிந்திப்போம்.

“எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள் அதனிடத்திலின்று ஜீவ ஊற்றுப் புறப்படும்” (நீதி. 4:23)




நம் வாழ்வில் ஜீவஊற்று புறப்பட்டு நன்மை பெற வேண்டுமென்றால் நமது இருதயம் எல்லாக் காவலோடும் காக்கப்படவேண்டும் என்று திருமறைக் கற்றுத் தருகிறது.

### 1. நன்மைக்கு ஏதுவாக காக்கப்படவேண்டும்:-

வாழ்வில் நன்மைகள் பெற்றுக்கொள்ளும் வழியில் நமது இதயம் காக்கப்படவேண்டும் என திருமறைக் கற்றுத் தருகிறது. எனவே புத்தியை சாரும் இதயமாக, ஞானம் பிரவேசித்திருக்கும் இருதயமாக நமது இருதயம் காக்கப்படவேண்டும் என ஆண்டவர் விரும்புகிறார். எனவே சாலமோன் ஞானி நீதிமொழிகள் புத்தகத்தில்,

1. என் மகனே, நீ உன் செவியை ஞானத்திற்குச் சாய்த்து, உன் இருதயத்தைப் புத்திக்கு அமையபண்ணும்பொருட்டு, (நீதி. 2:1)
2. ஞானம் உன் இருதயத்தில் பிரவேசித்து, அறிவு உன் ஆத்துமாவுக்கு இன்பமாயிருக்கும்போது, (நீதி. 2:10)
3. என் மகனே, உன் இருதயம் ஞானமுள்ளதாயிருந்தால், என்னிலே என் இருதயம் மகிழும். (நீதி. 23:15)
4. சுத்த இருதயத்தை விரும்புகிறவனுடைய உதடுகள் இனிமையானவைகள்; ராஜா அவனுக்குச் சிநேகிதனாவான். (நீதி 22:11)
5. என் மகனே, என்னை நிந்திக்கிறவனுக்கு நான் உத்தரவு கொடுக்கத்தக்கதாக, நீ ஞானவானாகி, என் இருதயத்தை சந்தோஷப்படுத்து. (நீதி. 27:11).

## 2. தீமைக்கு விலக்கி காக்கப்படவேண்டும்:-

தீமை நிறைந்த உலகில் வாழும் நாம் நம்மில் காக்கப்படவேண்டியது இதயம். தாமரை இலையில் தண்ணீர் ஒட்டாது. அதுபோல வாழும் வாழ்க்கையில் இதயத்தை தூய்மையாக தீமைக்கு விலக்கி காக்கப்படவேண்டும் என ஆண்டவர் விரும்புகிறார்.

தீமை செய்யும் இருதயத்தை தூய்மையாக்கவே இறைவன் விரும்புகிறார். எனவே மாறுபாடான இருதயமாக கொடுமையின் இருதயமாக, துராலோசனை பிணைக்கும் இருதயமாக, பின் வாங்கும் இருதயமாக, இறுமாப்பின் இருதயமாக நமது இருதயம் உருவாகாதபடி எச்சரிக்கையாய் இருக்கவேண்டும் என சாலோமான் ஞானி அழைக்கிறார்.

1. துராலோசனையைப் பிணைக்கும் இருதயம், தீங்கு செய்வதற்கு விரைந்தோடும் கால் (நீதி. 7:25)
2. உன் இருதயத்திலே அவள் அழகை இச்சிக்காதே; அவள் தன் கண்ணிமைகளினால் உன்னைப் பிடிக்கவிடாதே (நீதி. 6:25).
3. உன் இருதயம் அவள் வழியிலே சாயவேண்டாம்; அவள் பாதையிலே மயங்கித் திரியாதே (நீதி. 7:25).
4. மாறுபாடுள்ள இருதயமுடையவர்கள் கர்த்தருக்கு அருவருப்பானவர்கள்; உத்தம மார்க்கத்தாரோ அவருக்குப் பிரியமானவர்கள் (நீதி. 11:20).
5. தீங்கைப் பிணைக்கிறவர்களின் இருதயத்தில் இருக்கிறது கபடம்; சமாதானம்பண்ணுகிற ஆலோசனைகாரருக்கு உள்ளது சந்தோஷம் (நீதி. 12:20).
6. விவேகமுள்ள மனுஷன் அறிவை அடக்கிவைக்கிறான்; மூடருடைய இருதயமோ மதியீனத்தைப் பிரசித்தப்படுத்தும் (நீதி. 12:23).
7. அவர்கள் இருதயம் கொடுமையை யோசிக்கும், அவர்கள் உதடுகள் தீவினையைப் பேசும் (நீதி. 24:2).
8. அவன் இதம்பேசினாலும் அவனை நம்பாதே; அவன் இருதயத்தில் ஏழு அருவருப்புகள் உண்டு (நீதி. 26:25).
9. பின்வாங்கும் இருதயமுள்ளவன் தன் வழிகளிலேயும், நல்ல மனுஷனோ தன்னிலே தானும் திருப்தியடைவான் (நீதி. 14:14).
10. இருதயத்தின் கசப்பு இருதயத்திற்கே தெரியும்; அதின் மகிழ்ச்சிக்கு அந்நியன் உடந்தையாகான் (நீதி. 14:10).
11. அழிவு வருமுன் மனுஷனுடைய இருதயம் இறுமாப்பாயிருக்கும்; மேன்மைக்கு முன்னானது தாழ்மை (நீதி. 18:12).

### 3. நிலைவாழ்வுக்கு உதவியாய் காக்கப்படவேண்டும்:-

நித்திய வாழ்வுக்கு உதவியாய் நமது இருதயம் காக்கப்படவேண்டும். உலகத்திற்கு சாயும் இருதயமாக இராதபடிக்கு, இறைக்கட்டளைகளை காக்கும் இருதயமாக, கர்த்தர்மேல் நம்பிக்கைகொள்ளும் இதயமாக நமது இருதயம் காக்கப்படவேண்டும்.

நமது இருதயத்தை சோதித்து அறிகிற கர்த்தர் நம் இருதயத்தை நிறுத்துப் பார்க்கிறார் என திருமறை கூறுகிறது. எனவே நமது இருதயம் சோதித்து அறியப்படும்போதும் இறையரசுக்கு உகந்தவர்கள் என கர்த்தரால் சான்று பகரக்கூடிய வகையில் நம் இருதயம் காக்கப்படவேண்டும் எனவே நீதிமொழிகள் புத்தகம் இவ்வாறு கூறுகிறது,

1. என் மகனே, என் போதகத்தை மறவாதே, உன் இருதயம் என் கட்டளைகளைக் காக்கக்கடவது (நீதி. 3:1)
2. உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, (நீதி. 3:5)
3. மனுஷனுடைய இருதயம் அவனுடைய வழியை யோசிக்கும், அவனுடைய நடைகளை உறுதிப்படுத்துகிறவரோ கர்த்தர் (நீதி. 16:9)
4. வெள்ளியைக் குகையும், பொன்னைப் புடமும் சோதிக்கும்; இருதயங்களை சோதிக்கிறவரோ கர்த்தர் (நீதி. 17:3)
5. ராஜாவின் இருதயம் கர்த்தரின் கையில் நீர்க்கால்களைப்போலிருக்கிறது; அதைத் தமது சித்தத்தின்படி அவர் திருப்புகிறார் (நீதி. 21:1).
6. என் மகனே, நீ செவிகொடுத்து ஞானமடைந்து, உன் இருதயத்தை நல்வழியிலே நடத்து, (நீதி. 23:19).
7. உன் செவியைச் சாய்த்து, ஞானிகளுடைய வார்த்தைகளைக் கேட்டு, என் போதகத்தை உன் இருதயத்தில் வை (நீதி. 22:17).
8. மனுஷனுடைய வழியெல்லாம் அவன் பார்வைக்குச் செம்மையாகத் தோன்றும்; கர்த்தரோ இருதயங்களை நிறுத்துப்பார்க்கிறார் (நீதி 21:2).
9. மனுஷனுடைய வழியெல்லாம் அவன் பார்வைக்குச் செம்மையாகத் தோன்றும்; கர்த்தரோ இருதயங்களை நிறுத்துப் பார்க்கிறார் (நீதி. 21:2).

இப்படி நம் இருதயம் காக்கப்படுமாயின் இறைவன் விரும்பும் நல்ல வாழ்வு நம்மில் மலரும். முகத்தைக் காக்க பெரும் முயற்சி எடுக்கும் நாம் அகத்தை (இருதயத்தை) காக்கவும் முயற்சிகள் எடுப்போமாயின் அதுவே சிறப்பு என்பதே உண்மை. எனவே உண்மை உணர்வோம். உற்சாகமாய் செயல்படுவோம். ஆண்டவர் நம்மை ஆசீர்வதிப்பாராக. ஆமென்!

**அன்புடன் போதகர்**

**Rev. Dr. N. ஜெசின்**

## சிறுவர் பகுதி

## இதயத்தைக் காண்போம்



செங்கிஸ்கான் என்ற மன்னன் செல்லப்பிராணியாக ஒரு பருந்தை வளர்த்து வந்தான். கொடுங்கோலனான அவன் அந்தப் பருந்திடம் மிகுதியான பாசம் வைத்திருந்தான். பருந்தும் அவன்மேல் உயிரையே வைத்திருந்தது. செங்கிஸ்கான் எங்கே சென்றாலும் அந்தப் பருந்தையும் அழைத்துச் செல்வான்.

அரண்மனையில் ராஜபோக வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருந்தது அந்த பருந்து. ஒரு நாள் செங்கிஸ்கான் தன் நண்பர்களுடன் வேட்டைக்குப் புறப்பட்டான். நண்பர்கள் அனைவரும் கத்தி, ஈட்டி, வில், அம்பு என்று பலவகையான ஆயுதங்களை ஏந்தி வந்தார்கள். செங்கிஸ்கான் தன் செல்லப் பருந்தை மட்டுமே கொண்டு வந்தான். “என் பருந்து நூறு ஆயுதங்களுக்குச் சமம்” என்று நண்பர்களிடம் கர்வத்துடன் சொன்னான். அவன் குதிரையில் பயணித்தபோது பருந்து கம்பீரமாக அவன் முன்னால், குதிரைமேல் அமர்ந்து வந்தது.

பருந்தின் தலைமேல் வெள்ளியால் செய்த அழகான குல்லா ஒன்றைப் போட்டிருந்தான் செங்கிஸ்கான், தன் அடையாளத்துக்காக! அந்தக் குல்லா தலையில் இருக்கும்வரை பருந்து அவனை விட்டு விலகி செல்லாது. அவனுக்கு ஏதாவது தேவை என்றால், அந்த வெள்ளிக் குல்லாவைக் கையில் எடுத்துக்கொண்டு பருந்தின் காதில் ஆணையிடுவான். பருந்தும் பறந்து சென்று அவனது ஆணையை

நிறைவேற்றி வைக்கும். அன்று வேட்டையாட விலங்குகள் எங்கேயிருக்கின்றன என்று தெரியவில்லை. செங்கிஸ்கான் தன் பருந்தின் தலையில் இருந்த வெள்ளிக்குல்லாவைக் கழற்றி அதன் காதில் ஏதோ சொன்னான்.

பருந்து பறந்துசென்று விலங்குகள் இருக்கும் இடத்தைக் காண்பித்தது. செங்கிஸ்கானும் நண்பர்களும் களைத்து போகும்வரை வேட்டையாடினார்கள். விலங்குகளைத் தேடிக்கொண்டு ஓடியதில் ஒரு கட்டத்தில் செங்கிஸ்கான், தன் நண்பர்களிடமிருந்து விலகி வந்துவிட்டான். மேலே பறந்தபடி வேட்டைக்கு உதவிசெய்து கொண்டிருந்த பருந்து மட்டுமே அவனுடன் இருந்தது. செங்கிஸ்கானுக்கு கடுமையான தாகம் எடுத்தது.

நீரைத்தேடி அங்கும் இங்கும் அலைந்து கொண்டிருந்தான். ஒரு இடத்தில் பாறையில் இருந்து நீர் வழிந்துகொண்டிருந்தது. பருந்தின் தலையில் இருந்த வெள்ளிக்குல்லாவைக் கழட்டி அதில் நீரைப் பிடித்தான். அவன் நீரைப் பருகும் நேரத்தில் பருந்து பறந்துவந்து அந்தத் தண்ணீரைத் தட்டிவிட்டது. தாகத்தில் தவித்துக்கொண்டிருந்த மன்னனுக்கு முதலில் பருந்தின் செயல் வியப்பாகத்தான் இருந்தது. தன் கையில் அமர்ந்திருந்த பருந்தை மென்மையாகத் தடவி கொடுத்துவிட்டு மீண்டும் தண்ணீரைப் பிடித்தான். குல்லாவில் நீர் நிரம்பி மன்னன் பருகும் சமயத்தில் பருந்து பறந்துவந்து மீண்டும் தண்ணீரைத் தட்டிவிட்டது. இப்போது மன்னனுக்குக் கடுங்கோபம்.

“இதே செயலை என் அமைச்சர் யாராவது செய்திருந்தால் அவரது தலையைக் கொய்திருப்பேன். நீ என் செல்லப் பிராணி என்பதால் உன்னை மன்னித்து விடுகிறேன். இனி ஒருமுறை இப்படிச் செய்தால் விளைவுகளுக்கு நான் பொறுப்பில்லை” என்று கடிந்தபடி, செங்கிஸ்கான் தன் போர்வாளை உறையிலிருந்து எடுத்து கையில் பிடித்துக்கொண்டான். ஓரக்கண்ணால் பார்த்தபடி மீண்டும் தண்ணீரைப் பிடித்தான்.

“இந்த முறை தண்ணீரைத் தட்டிவிட்டு விளையாடினாயோ, நீ செத்தாய்” என்று மனதிற்குள் கறுவிக் கொண்டான்.

இம்முறை வெள்ளிக்குல்லாவில் தண்ணீர் நிரம்ப நேரமானது. ஏனெனில் ஊற்று மிகவும் மெதுவாக வந்து கொண்டிருந்தது. பருந்தை பார்த்தபடி நீரைக் குடிக்கப்போனான் மன்னன். அது மன்னனை நோக்கி பறந்து வந்தது. வாளை வீசினான் அந்த கொடுங்கோலன். பருந்து வெட்டுண்டது என்றாலும் அந்த உயிர் துறக்கும் வேளையிலும், மன்னன் கையில்

இருந்த நீரின் மேல் விழுந்து அதைக் குடிக்காமல் செய்துவிட்டது. பருந்து இறந்துவிட்டது. மன்னனின் கோபம் அடங்கவில்லை. தாகம் அதைவிட அதிகமாக இருந்தது. நீரின் வரத்து படிப்படியாகக் குறைந்து முற்றிலுமாக நின்றுவிட்டது. இந்த நீர் எங்கிருந்து வருகிறது என்று கண்டுபிடித்து அங்கே போய் தாகசாந்தி செய்து கொள்ளலாம் என்று புறப்பட்டான். பாறையில் சிரமப்பட்டு ஏறிப் பார்த்தான். அங்கே ஒரு இடத்தில் நிறைய நீர் தேங்கி இருந்தது. அதிலிருந்துதான் நீர் கசிந்துகொண்டிருந்தது என்பதைத் தெரிந்துகொண்டான்.

தேங்கியிருக்கும் அந்த நீரைக் கையால் அள்ளி அருந்தலாம் என்று நினைத்துக் கீழே குனிந்தான். அந்த நீர்த் தேக்கத்தில் கொடிய விஷமுள்ள கருநாகம் ஒன்று செத்துக் கிடந்தது. அந்த நீரிலேயே அது பல நாட்களாக கிடந்திருக்கவேண்டும். மன்னன் அந்த நீரை அருந்தியிருந்தால், சந்தேகமில்லாமல் உடனே செத்திருப்பான். அதனால்தான் பருந்து அவனை அந்த நீரை அருந்தவிடவில்லை. உலகின் மிகப்பெரிய கொடுங்கோலனான செங்கிஸ்கான், இறந்து கிடந்த பருந்தின் அருகில் அமர்ந்து அழுதான். நாடு திரும்பியதும் தனது தலைநகரத்தில் தங்கத்திலான பருந்தின் சிலை செய்து வைத்தான். அதன் ஒரு சிறகில் கீழ்க்கண்ட பொருள் விளக்கும் வாசகங்களை எழுதச் செய்தான். கோபத்தில் செய்யப்படும் எல்லாச் செயல்களும் துயரத்தையே தருகின்றன. மற்றொரு சிறகில் அவன் எழுதச் சொன்ன வாசகம் இன்னும் மகத்தானது.

“உன்னுடைய உண்மையான நண்பன், உனக்குப் பிடிக்காத செயல்களைச் செய்தாலும் அதை உன் நன்மைக்காகவே செய்கிறான் என்பதை நினைவில் கொள்”

செங்கிஸ்கான் கதை இத்துடன் முடிகிறது. இது ஓர் உண்மையான நிகழ்வு.


“என் மகனே உன் இருதயம் ஞானமுள்ளதாயிருந்தால் என்னிலே என் இருதயம் மகிழும்” (நீதி. 23:15) என வேதம் நம்மை அழைக்கிறது. நமது இருதயத்தில் ஏன், எதற்கு, எப்படி என்றும் கேள்விகள் வேண்டும்.

ஒரு செயலை எடைபோடும்போது அந்த செயலை மட்டும் பார்க்காமல் அதைச் செய்பவர் எப்படிப்பட்டவர் என்பதையும் பார்க்கவேண்டும். நமது பெற்றோர், நம் குரு, உண்மையான நண்பர்கள் பல சமயங்களில் நமக்குப் பிடிக்காததைச் செய்வார்கள். நம்முடைய நன்மைக்காகத்தான் அப்படிச் செய்கிறார்கள் என்பதை உணர்ந்துகொள்ளவேண்டும். சரியா!

**அன்புடன் போதகர்**

# மகளிர் பகுதி

கிறிஸ்துவில் அன்புக்குரியவர்களே! இம்மாதம் ஆண்டவரில் நம் இதயம் மகிழும் மாதமாக ஆண்டவர் நமக்கு தந்திருக்கிறார். ஆண்டவருக்கு நன்றி செலுத்துவோம். தாவீது ராஜா பாடும்போது "அவருடைய பரிசுத்த நாமத்தைக் குறித்து மேன்மைபாராட்டுங்கள்; கர்த்தரைத் தேடுகிறவர்களின் இருதயம் மகிழ்வதாக" (சங்கீதம் 105:3).



மயக்க மருந்தான குளோரோபார்ம் கண்டுபிடிப்பு, மருத்துவதுறைக்கு கிடைத்த மிகப்பெரிய வரப்பிரசாதம் என்றே சொல்லவேண்டும். அந்த மருந்தை கண்டுபிடித்தவரைத் தெரியுமா? ஜேம்ஸ் யங் சிம்சன் (James Young Simpson). இவர் 1811-ம் ஆண்டு ஜுன் 7-ம் தேதி ஸ்காட்லாண்டைச் சேர்ந்த ஒரு பேக்கரிக் கடைகாரருக்கு ஏழாவது மகனாகப் பிறந்தார். தன் 21-வது வயதில் மருத்துவப் பட்டம், மகப்பேறு மருத்துவப் பேராசிரியர் பதவி கிடைத்தது.

தேவ பக்தியுடையவரான ஜேம்ஸ் சிம்சன், ஒரு முறை வேதத்தில் ஆதியாகமம் என்னும் பகுதியில் முதல் மனிதன் ஆதாமின் விலா எலும்பிலிருந்து ஏவாள் என்ற பெண் உருவாக்கப்பட்ட சம்பவத்தை வாசித்து கொண்டிருந்தார். அதில் "தேவன் ஆதாமுக்கு ஆழ்ந்த உறக்கத்தை வரப்பண்ணினார். அவன் உறக்கத்திலிருந்தபோது, அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து, அந்த இடத்தை சதையினால் அடைத்தார். உருவப்பட்ட அந்த விலா எலும்பைக் கொண்டு ஒரு பெண்ணை உருவாக்கினார்" என்று எழுதப்பட்டிருந்தது. இந்த பகுதியை வாசித்தபோதுதான் குளோரோபார்மை கண்டுபிடிப்பதற்கான விதை ஜேம்ஸ் சிம்சனின் உள்ளத்தில் விழுந்தது. உடலில் சிறு காயம் ஏற்பட்டால் வேதனை உண்டாவது இயற்கை. ஆனால் ஆதாமோ, தன் உடலில் விலா எலும்பை எடுக்கும்போதுகூட எந்த வலியோ, வேதனையோ இல்லாமல், தொடர்ந்து ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தது எப்படி என்று யோசித்துக்கொண்டிருந்தார். இப்படி ஜேம்ஸ் சிம்சனின் எண்ணங்களில் சிறகடித்துப் பறந்துகொண்டிருந்த இந்த சிந்தனையானது செயல் வடிவம் பெற்று, பல்வேறு ஆய்வுகளுக்குப் பின்னர் குளோராபார்மாக வெளிவந்தது.

ஒருமுறை ஜேம்ஸ் எடின்பர்க் பல்கலைக் கழகத்தில் உரையாற்றிக் கொண்டிருந்தார். அப்பொழுது, ஒரு மாணவர், உங்கள் கண்டுபிடிப்புகளிலே நீங்கள் மிகவும் பிரதானமாகக் கருதும் கண்டுபிடிப்பு எது? என்று கேட்டார். எல்லா மாணவர்களும் குளோராபார்மைத்தான் சொல்லுவார் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் அவரோ, என் கண்டுபிடிப்புகளிலே பிரதானமானது, “இயேசு கிறிஸ்து என் இரட்சகர்” என்பதுதான் என்றார். கர்த்தருடைய பரிசுத்த நாமத்தைக் குறித்து மேன்மைபாராட்டி மகிழ்ந்தார்.

கிறிஸ்துவுக்கு பிரியமானவர்களே! கர்த்தர் நம் ஒவ்வொருவரையும் சாதனையாளராகவே பார்க்கின்றார். முதலாவதாக கர்த்தருடைய பரிசுத்த நாமத்தைக் குறித்து மேன்மைபாராட்டக்கூடிய நல்ல இதயத்தையே கர்த்தர் உங்களிடம் இருந்து எதிர்பார்க்கின்றார். எனவே முதலாவதாக நம் இருதயம் கர்த்தரை மேன்மைப்படுத்தட்டும்.

இரண்டாவதாக தாவீது ராஜா குறிப்பிடும்போது கர்த்தரைத் தேடவேண்டும். உலகத்தையும், பணத்தையும், செல்வத்தையும், ஆஸ்தியையும், பட்டம் பதவியையும் தேடி ஓடும் உலகில் வாழுகின்றோம். ஆனால் இறுதியில் எதுவும் நம்மோடு வரப்போவது இல்லை என்னும் உண்மையை மனிதன் புரிவது இல்லை. 110 நாடுகளுக்கு மேலாக மக்களை ஆய்வுசெய்த நிறுவனம் ஒன்று அதிர்ச்சியான செய்தி ஒன்றை வெளியிட்டது. ஒரு மனிதன் பணத்தினால் அல்லது செல்வத்தால் பெற்றுக்கொள்ளும் மகிழ்ச்சி வெறும் 10% மட்டுமே என்பதுதான் அது.

வேதம் அதை தெளிவுபடுத்தி நிற்கிறது. 1சாமுவேல் 2:1-ல் அன்னாள் ஜெபம்பண்ணி என் இருதயம் கர்த்தருக்குள் களிகூருகிறது என்கிறாள். ஏனென்றால் கர்த்தரை மேன்மைப்படுத்தினாள், கர்த்தரை நம்பினாள். அவள் விரும்பினதைப் பெற்றுக்கொண்டாள். உலகத்திற்காக களிகூரவில்லை.

இதைத்தான் தாவீது ராஜா சங்கீதம் 13:5-ல் “நான் உம்முடைய கிருபையின்மேல் நம்பிக்கையாயிருக்கிறேன். உம்முடைய இரட்சிப்பினால் என் இருதயம் களிகூரும்” என நம்பிக்கையை வெளிப்படுத்தி நிற்கிறார்.

இதை உணர்ந்தவர்களாகிய நாம் நீதிமொழிகள் 23:15-ன் படி “என் மகனே உன் இருதயம் ஞானமுள்ளதாயிருந்தால் என்னிலே என் இருதயம் மகிழும்” நாமும் ஞானமுள்ள இருதயமுள்ளவர்களாகி நாம் மகிழ்ந்திருப்பதோடு நமது ஆண்டவர் இருதயத்தையும் மகிழப்பண்ணுவோம். ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

**அன்புடன் பெண்கள் சங்க தலைவி,**

**திருமதி D. ஷர்மிளா ஜெசின்**

## நரகத்திலிருந்து மோட்சத்திற்கு



மண்ணில் : 1774
விண்ணில் : 1844
தரிசன பூமி : தகத்திதீவு

கிறிஸ்தவ அறிஞர் அகஸ்டினிடம் வாலிபன் ஒருவன் வந்தான். அவன் அவரிடம், இந்த உலகத்தைப் படைப்பதற்கு முன், கடவுள் என்ன செய்து கொண்டிருந்தார்? என்று கேட்டான். அதற்கு அவர் இப்படிப்பட்ட கேள்விகளைக் கேட்பவர்களுக்காகவே நரகத்தை ஆயத்தம் பண்ணிக் கொண்டிருந்தார் என்றார்.

இப்படிக் கேள்வி கேட்பவர்களுக்கு மட்டுமல்ல, இயேசு கிறிஸ்துவைப் பற்றி கேள்விப்பட்டிராதவர்களுக்கும் நரகம் ஆயத்தமாயிருக்கிறது. சுவிசேஷ செய்தியானது இன்னும் உலகத்தின் பல பாகங்களுக்கும் அறிவிக்கப்படவில்லை. அவர்கள் நரகத்திற்குச் செல்ல நீங்கள் விரும்புகிறீர்களா? அவர்கள் ஆத்துமாவைக் குறித்த கரிசனை என்ன?

ஹென்றி நாட் ஒரு சிறந்த ஆத்தும ஆதாய வீரர். கிறிஸ்துவின் அன்பை ருசிபார்த்த இவர், இயேசுவைப் பற்றி அறியாத மக்களுக்கு அறிவித்திட வாஞ்சை கொண்டார். எனவே தன்னை லண்டன் மிஷனெரி சங்கத்தின் மூலமாக, ஊழியத்திற்கு அர்ப்பணித்தார்.

தகித்தி என்ற இடம், பாலிநேசியா தீவில் உள்ளது. மக்கள் மிகவும் கொடூரர்கள். அறியாமையில் அனுதினமும் அறிவற்ற செயல்களைச் செய்பவர்கள். இவர்களின் தெய்வங்களுக்கு சிறுவர்கள் பலி கொடுக்கப்பட்டனர். வயதான முதியவர்கள், உயிருடன் குழிக்குள் தோண்டி புதைக்கப்பட்டனர். 12 வயதிற்கு மேல் பெண் குழந்தைகள் கட்டாய திருமணம் செய்து வைக்கப்பட்டனர்.

கிறிஸ்தவ நற்செய்தி பரப்ப சென்ற எவரும் உயிருடன் திரும்பியதில்லை. ஹென்றி நாட் அவ்விடத்தை பற்றிக் கேள்விப்பட்டார். அவ்விடத்திற்கே மிஷனெரியாக செல்வேன் என்று உறுதிக்கொண்டார். 1797-ம் ஆண்டு, தகித்தி என்ற இடத்திற்கு வந்தார். அம்மொழியை மிகவும் கடினத்துடன் கற்றார். இவருடன் வந்தவர்கள் அம்மக்களின் கொடிய ஆயுதத்தால் தாக்கப்பட்டுத் தங்கள் உயிரைத் இழந்தார்கள். பலமுறை இவர் வீட்டை விட்டு அடித்துத் துரத்தப்பட்டார். பொருட்கள்

களவு செய்யப்பட்டன. ஆயினும், அம்மக்கள் மொழியிலேயே வேதாகமத்தைக் கொண்டு வருவதற்கு மிகுந்த முயற்சி செய்து வெற்றியும் பெற்றார்.

20 வருடங்களுக்குப்பின் ஒருவர் மனந்திரும்பவே, தொடர்ந்து அவ்விடத்து அரசனும் கிறிஸ்துவண்டை வந்தான். 47 வருடங்கள் அங்கு வெற்றிகரமாக தன் பணியை முடித்தார்.

அன்பரே! மூடத்தனங்களில் வாழும் மக்களை மனந்திரும்பச் செய்ய முன்வருவீர்களா?

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு:-** கடவுளோடு நெருங்கி ஜீவித்தவர்கள் எவரும் வாழ்க்கையை வீணடித்தவர்கள் அல்ல – ஹோரிடியஸ் போனர்


**குயவனின் கரங்களில்:-** ஆண்டவரே! மிஷெனெரிப் பணித்தாகம் என்னுள்ளத்தில் கொளுந்துவிட்டு எரிய உதவிசெய்யும்.

**தியானத்திற்கு:- 1நாளா. 16, எசேக். 28, கலாத்தியர் 1,2**

## நிகழ்வும் பாடமும்

### இதயத்தில் வைக்கவேண்டிய வாழ்க்கை தத்துவம்

- அழிவைத் தருவது – ஆணவம்
- ஆபத்தைத் தருவது – கோபம்
- இருக்கவேண்டியது – பணிவு
- இருக்கக்கூடாதது – பொறாமை
- உயர்வுக்கு வழி – உழைப்பு
- கண்கண்ட தெய்வம் - பெற்றோர்
- செய்யவேண்டியது – உதவி
- செய்யக்கூடாதது – துரோகம்
- நம்பக்கூடாதது – வதந்தி
- நழுவவிடக்கூடாதது – வாய்ப்பு
- நம்முடன் வருவது – புண்ணியம்
- பிரியக்கூடாதது – நட்பு
- மறக்கக்கூடாதது – நன்றி



- மிகமிக நல்லநாள் - இன்று
- மிகப்பெரிய தேவை – அன்பு
- மிகக்கொடிய நோய் - பேராசை
- மிகவும் சுலபமானது – குற்றம்காணல்
- மிகப்பெரிய வெகுமதி – மன்னிப்பு

## இருதயம் பலவிதம், உன் இருதயம் எவ்விதம்

1. கடின இருதயம் - யாத்திராகம் 7:14
2. மாயமுள்ள இருதயம் - யோபு 36:13
3. திடனற்ற இருதயம் - எண்ணாகமம் 32:9
4. முழு இருதயம் - உபாகமம் 6:5
5. பேசும் இருதயம் - 1சாமுவேல் 1:13
6. உத்தம இருதயம் - ஆதியாகம் 20:5
7. களிகூரும் இருதயம் - 1சாமுவேல் 2:1
8. உண்மை இருதயம் - யோபு 36:13



## வாழ்த்துகிறோம்



நமது திருச்சபை பணிகளில் பல நிலைகளில் குடும்பமாய் உதவி செய்துவந்த முன்னாள் செயலர் **திரு. ஜோண்ஸ் அவர்கள் குடும்பம்** பணிநிறைவு செய்து தாயகம் திரும்புகிறார்கள். அவர்கள் ஓய்வுகாலம் இறை ஆசியோடு குடும்பமாய் மனநிறைவோடு வாழ திருச்சபை சார்பில் அன்போடு வாழ்த்துகிறோம்.

**இவண்,**
**சபைபோதகர், சபைக்குழு மற்றும் சபைமக்கள்**

## அக்டோபர் 2020 மாத கேள்விகள்
## (I, II, III யோவான் மற்றும் யூதா)

1. எல்லாராலும் சத்தியத்தால் நற்சாட்சிபெற்றவன் யார்?
2. உலகத்தை ஜெயிக்கிற ஜெயம் எது?
3. தன் சகோதரனைப் பகைக்கிறவன் எங்கு இருக்கிறான்?
4. சத்தியமுள்ளவரை அறிந்துகொள்வதற்கு தேவனுடைய குமாரன் நமக்கு எதைத் தந்திருக்கிறார்?
5. மோசேயினுடைய சரீரத்தைக் குறித்தும் பிசாசுடனே தர்க்கித்துப் பேசின பிரதான தூதன் யார்?
6. பூரண அன்பு எதை புறம்பே தள்ளும்?
7. அந்திக்கிறிஸ்து யார்?
8. பிதாவையும், குமாரனையும் உடையவன் யார்?
9. பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கு வெளிப்பட்டவர் யார்?
10. யாருடைய இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும்?
11. எதற்காக தைரியமாய் போராடவேண்டும்?
12. தேவனுடைய குமாரன் இல்லாதவன் எப்படிப்பட்டவன்?
13. யாரிடத்தில் பிதாவின் அன்பில்லை?
14. பரலோகத்திலே சாட்சியிடுகிறவர்கள் யார்?
15. யார் நியாயப்பிரமாணத்தை மீறுகிறான்?
16. யாரிடத்தில் தேவ அன்பு பூரணப்பட்டிருக்கும்?
17. எதற்கு தைரியமுண்டாயிருக்கத்தக்கதாக அன்பு தம்மிடத்தில் பூரணப்படுகிறது?
18. தேவன் நமக்கு செய்த வாக்குத்தத்தம் எது?
19. யார் தேவனைக் காணவில்லை?
20. மரணத்திலே நிலைகொண்டிருக்கிறவன் யார்?

## செப்டம்பர் 2020 மாத திருமறை அறிவு போட்டிக்கான விடைகள்

1. ஜபிராத்து – வெளி. 16:12
2. மிகாவேலும் அவனைச் சேர்ந்த தூதர்களும் - வெளி. 12:7
3. கண்ணாடிக் கடலருகே – வெளி. 15:2
4. இயேசுவைப்பற்றின சாட்சி – வெளி. 19:10
5. பூமியின்மேல் - வெளி. 14:16
6. ஆட்டுக்குட்டியானவரே – வெளி. 21:23
7. ஆத்துமா இச்சித்த – வெளி. 18:14
8. ஆயிரத்திருநூற்றறுபது நாள் - வெளி. 12:6
9. பரலோகத்திலே – வெளி. 15:5
10. சிங்காசனத்திலிருந்து – வெளி. 22:1
11. சிறுத்தை – வெளி. 13:1,2
12. எபிரெயு பாஷை - வெளி. 16:16
13. ஆயிரத்தறுநூறு ஸ்தாதி – வெளி. 14:20
14. சூனியத்தால் - வெளி. 18:23
15. பெருங்கழுகின் இரண்டு சிறகுகள் - வெளி. 12:14
16. முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் - வெளி. 20:6
17. புத்தியுடையவன் - வெளி. 13:18
18. தேவனுடைய வார்த்தை – வெளி. 19:13
19. ஆட்டுக்குட்டியானவர் - வெளி. 17:14
20. சுவர்ணரத்தினம் - வெளி. 21:19,20

## செப்டம்பர் மாத திருமறை போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள்

| | | |
|---|---|---|
| Mrs. Anbu Selvi Daniel Raj | Mrs. Jeya Rani Victor | Mrs. Sapthekha Jerry Sathya |
| Mrs. Ancy Daniel | Mrs. Josephin Anto Kingston | Mrs. Sarah Rajasingh |
| Mrs. Ashika Joel | Mrs. Juslin Jaslin | Mrs. Sathya Priya Ramesh |
| Mrs. Aspin Bejo | Mrs. Leela Gladson | Mrs. Shabila Gnanadhas |
| Mrs. Boopathi Baskar | Mrs. Manju Martin | Mrs. Shiney Johan |
| Mrs. Evangelin Yesudhas | Mrs. Mary Praveena Gobinath | Mrs. Sujatha Shalini Jino |
| Mrs. Felsi Rani John | Mrs. Nisha Rajan | Mrs. Thamari Johnson |
| Mrs. Golden Irene Sheeja Robin | Mrs. Percy Jean | Mrs. Vanitha Rani Prince |
| Mrs. Gracilin Melba Sujin | Mrs. Priyadarsini Kanagavel | Mrs. Vency Deepa Kannan |
| Mrs. Jancy Deepa Victor | Mrs. Pushpa Rani Moorthy | Mrs. Virgin Jegatha Jino |
| Mrs. Jenshy N. Lenin | | |

## அக்டோபர் 2020 மாத கேள்விகள்

## (நீதிமொழிகள் 11 முதல் 20 வரை)

1. ராஜாவின் மகிமை எது?
2. குளிர்ந்த மனமுள்ளவன் யார்?
3. செம்மையானவர்களுடைய ஆசீர்வாதத்தினால் நிலைபெற்றோங்குவது எது?
4. வாலிபரின் அலங்காரம் எது?
5. தீங்கை பிணைக்கிறவர்களின் இருதயத்தில் இருக்கிறது எது?
6. நற்செய்தி எதை புஷ்டியாக்கும்?
7. மனுஷனுடைய வழியை தாறுமாறாக்குவது எது?
8. எதை அவமதிக்கிறவன் நாசமடைவான்?
9. ஆழமான ஜலம் போலிருப்பது எது?
10. ஒரு நிமிஷமாத்திரம் இருப்பது எது?
11. குற்றத்தை மன்னிப்பதினால் கிடைப்பது எது?
12. ஆத்துமாக்களை ஆதாயபடுத்திக் கொள்ளுகிறவன் யார்?
13. விழுதலுக்கு முன்னானது எது?
14. மனுஷனுடைய ஐசுவரியம் எதை மீட்கும்?
15. அழிம்பனுக்குச் சகோதரன் யார்?
16. புருஷனுக்குக் கிரீடமாயிருப்பவள் யார்?
17. முகமலர்ச்சியைத் தருவது எது?
18. பிள்ளைகளின் பிள்ளைகள் யாருக்குக் கிரீடம்?
19. இருதயத்தின் கசப்பு எதற்கு தெரியும்?
20. சோம்பேறியின் வழி எதற்கு சமானம்?

## செப்டம்பர் 2020 மாத திருமறை அறிவு போட்டிக்கான விடைகள்

1. ஞானமுள்ள மகன் - நீதி. 10:1
2. நீதிமான்களுடைய – நீதி. 4:18
3. நல்யோசனை – நீதி. 2:11
4. மூடனுக்கு – நீதி. 10:23
5. ஞானமே – நீதி. 8:11
6. நிர்விசாரம் - நீதி. 1:32
7. அறிவை – நீதி. 5:2
8. ஞானவான்கள் - நீதி. 3:35
9. வறுமை – நீதி. 6:11
10. பிரம்பு – நீதி. 10:13
11. கர்த்தரின் கட்டளைகளையும், போதகத்தையும் - நீதி. 7:2
12. இதயத்திலிருந்து – நீதி. 4:23
13. தகப்பன் புத்தி – நீதி. 1:8,9
14. உத்தமர்கள் - நீதி. 2:21
15. தீமையை வெறுப்பதே – நீதி. 8:13
16. சுறுசுறுப்புள்ளவன் - நீதி. 10:4
17. கொடுமையுள்ளவன்மேல் - நீதி. 3:31
18. போதகசிட்சையே – நீதி. 6:23
19. பேதமையை – நீதி. 9:6
20. மனுஷனுடைய – நீதி. 5:21

## செப்டம்பர் மாத திருமறை போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள்

| | |
|---|---|
| Mr. Alex Baskar | Mr. Johan Pratheep |
| Mr. Anu | Mr. Kanagavel |
| Mr. Austin Daniel Raj | Mr. Lenin Raj |
| Mr. Bejo Nelson | Mr. Prince J. P. |
| Mr. Daniel Raj P. | Mr. Rajan V. N. |
| Mr. Jaslin Sundara Kumar | Mr. Ramesh R. |
| Mr. Jean C. R. Shibin | Mr. Robin Devadhas |
| Mr. Jino John | Mr. Sujith Gladson |

## May God Bless All

## Birthday Celebrants – October 2020

| | |
|---|---|
| 01st October | Mr. Robert Dhas |
| 02nd october | Mrs. Maria Tracy, W/o Mr. Gnana Ruban |
| 03rd October | Miss. Josena Broose, D/o Mr. Jegan Broose |
| 05th October | Mrs. Mabel, W/o Mr. Nelson |
| 11th October | Mr. Kanagavel |
| 11th October | Master. Jerrin John, S/o Mr. A. Rajasingh |
| 12th October | Mrs. Sumimol, W/o Mr. Vinobha |
| 13th October | Mr. R. Ramesh |
| 14th October | Mr. Jude Dennis |
| 16th October | Mr. Jerry Sathya |
| 17th October | Mr. Bensam |
| 19th October | Mrs. Sarah, W/o Mr. Arumainayagam Rajasingh |
| 20th October | Mr. Lejo Salvin, S/o Mr. George |
| 21st October | Mr. Gladson, S/o Mr. David Sundersingh |
| 21st October | Mrs. Manju, W/o Mr. Justus Martin |
| 23rd October | Mrs. Vency Deepa, W/o Mr. S.Kannan |
| 24th October | Mrs. Vimala, W/o Mr. Selvamani |
| 24th October | Miss. Sherly Grazila, D/o Mr. Selva Kumar |
| 28th October | Mrs. Ashika Sharon, W/o Mr. Joel |
| 28th October | Miss. J. Keziah Jesha, D/o Mr. Jerry Jones |
| 30th October | Mr. Ajin |
| 31st October | Mrs. Ida Shanthi Priya, W/o Mr. P. Lenin |
| 31st October | Mrs. Sapthekha, W/o Mr. Jerry Sathya |

## Wedding Day Anniversaries – October 2020

| | |
|---|---|
| 22nd October | Mr. Ezhil Kumar & Mrs. Kiruba |
| 30th October | Mr. T. Raju & Mrs. Sujithra |

# ஜெபிக்க சில குறிப்புகள்

## திருச்சபைக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. போதகருக்காக, குடும்பத்துக்காக, போதகர் விசாவுக்காக, உடல் ஆரோக்கியம், ஊழிய ஆற்றல், உற்சாகமான திருப்பணிகளுக்காக ஜெபிப்போம்.

2. சபை கமிட்டி அங்கத்தினர்களுக்காக, குடும்பத்துக்காக, அவர்கள் பங்களிப்புக்காக, பொறுப்பான ஊழிய செயல்பாடுகளுக்காக ஜெபிப்போம்.

3. அனைத்து கிளை ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.
   - ஓய்வுநாள் பள்ளி
   - பெண்கள் ஐக்கிய சங்கம்
   - ஆண்கள் ஐக்கிய சங்கம்
   - பாடகர் குழு
   - ஜெபக் குழு

   அனைத்து பொறுப்பாளர்கள், பங்காளர்கள், பங்களிப்புகள், உற்சாகமான செயல்பாடுகள் அதன் ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.

4. திருச்சபையின் தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம். ஊழியத் தேவைகள் தடையின்றி இறைமக்களால் சந்திக்கப்பட, இறை ஊழியங்களின் தடைகள் நீங்க பாரத்தோடு ஜெபிப்போம்.

5. திருச்சபை திறக்கப்படவும், திருச்சபை ஆராதனைகளில் ஆண்டவர் பிரசன்னம் அனைவரும் உணரப்படவும், திருச்சபையில் எழுப்புதல் உண்டாகவும் ஜெபிப்போம்.

6. திருச்சபையில் ஒற்றுமையாய் செயல்படுவதன்மூலம் உருவாகும் இறை ஆசி அனைவரும் பெற்றுக்கொள்ளவும், அனைத்து இறைமக்களும் உண்மையான இறைவார்த்தையை உணரவும், எல்லாத் தடைகளையும் தாண்டி ஒருமைப்பாடு ஏற்படுவதன் மூலம் திருச்சபை இன்னும் கட்டி எழுப்பப்படவேண்டும் என பாரத்தோடும் ஜெபிப்போம்.

## மிஷனெரி பணிகளுக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. நமது திருச்சபையால் தாங்கப்பட்டுவரும் 11 மிஷனெரிகளுக்காக, அவர்கள் குடும்பங்களுக்காகவும், அவர்கள் பாதுகாப்பிற்காகவும், நல்வாழ்வுக்காகவும் ஜெபிப்போம்.
2. மிஷனெரிகளின் பணித்தளங்களுக்காக, பணித்தளத்தில் செய்யப்படும் ஊழியங்களுக்காக, ஊழியக்களத்தில் அநேக ஆத்துமாக்கள் அறுவடைச் செய்யப்பட மன்றாடுவோம்.
3. மலை நாடுகளில் செய்யப்படும் திருப்பணிகளுக்காக, வடநாடுகளில் நற்செய்தி பணி செய்வோருக்காக, ஆண்டவரை அறியாத முரட்டாட்டமான மக்கள் மத்தியில் இறைபணி செய்வோருக்காக மன்றாடுவோம்.
4. பணித்தளங்களின் தேவைகள் அரசாலும், நிறுவனங்களாலும், மக்களாலும் தாங்கப்பட ஜெபிப்போம்.
5. மக்களின் மனமாற்றத்திற்காகவும், இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு அறிக்கையிட்டு மனந்திரும்ப பாரத்தோடு வேண்டுதல் செய்வோம். எதிர்ப்புகள் மாறவும், எதிராளிகள் மனந்திரும்பவும், எழுப்புதல் உண்டாகவும் மன்றாடுவோம்.

## ஓமான் தேசத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. ஓமான் தேசத்திற்காக, தேசத்தின் ராஜாவுக்காக, தேசத்தின் மக்களுக்காக, தேசத்தின் ஷேமத்திற்காக ஜெபிப்போம்.
2. பொருளாதார வீழ்ச்சியிலிருந்து விடுபட்டு மக்கள் வேலைவாய்ப்புகள் பெருகவும், நிறுவனங்கள் சிறப்பாய் செயல்படவும், பாதிப்புகள் மாறவும் மக்கள் வாழ்வாதாரங்கள் பெருகவும் மன்றாடுவோம்.
3. பணியாளர் குறைப்பு, ஊதிய குறைப்பு, பணிநேர குறைப்பு போன்றவை மாற்றமடைந்து பொருளாதார செழிப்பு ஏற்பட்டு மக்கள் வாழ்வு ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்.
4. கொடிய வியாதிகள், கொடிய விபத்துக்கள், புதிய சட்டத்திட்டங்கள், தேசத்தின் மாற்றங்கள் வாழ்வு தேடி வந்துள்ள மக்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படுத்தாதபடி மக்கள் அனைவரும் இறைபாதுகாப்பு பெற்றுக்கொள்ள வேண்டுதல் செய்வோம்.
5. தேசத்தின் காலநிலை மாற்றங்கள், சூழ்நிலை மாற்றங்கள் மக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தாதபடி இறைஅன்பை உணர மன்றாடுவோம்.

## இந்திய தேசத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. சுதந்திரம் பெற்று 74-ம் ஆண்டை சந்திக்கும் நாட்களில் அரசியலில், சமூகத்தில், சமயத்தில், வாழ்வில், குடும்பங்களில் உண்மையான சுதந்திரம் உருவாக ஜெபிப்போம்.

2. அனைத்து தலைவர்களுக்காக, அதிகாரிகளுக்காக, ஆட்சியாளர்களுக்காக, பணியாளர்களுக்காக, மன்றாடுவோம். அனைவரும் சேவை மனப்பான்மையோடு தங்கள் பணிகளை மேற்க்கொள்ள ஜெபிப்போம்.

3. மது, லஞ்சம், ஊழல், கொலை, கொள்ளை, விபத்துக்கள், தற்கொலைகள், கடத்தல்கள் தேசத்தைவிட்டு நீங்கவும், மக்கள் சமாதானமாக வாழவும் மன்றாடுவோம்.

4. பொருளாதார வீழ்ச்சி, வேலையின்மை, கடன்பிரச்சனை, கொடிய வியாதிகள், இயற்கையின் அழிவுகளிலிருந்து தேசம் காக்கப்படும்படியாய் வேண்டுதல் செய்வோம்.

5. பாகிஸ்தான், சீனா, நேபாள எல்லைப்பகுதிகளின் பாதுகாப்புக்காகவும், எல்லை பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருக்கும் அதிகாரிகளுக்காகவும் மன்றாடுவோம். நாடுகளுக்கிடையே நல்லிணக்கம் ஏற்பட்டு சமாதானத்தின் தேசமாய் இந்திய தேசம் திகழ ஜெபிப்போம்.

## குடும்பத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. குடும்ப சமாதானத்திற்காகவும், குடும்பங்களின் நல்வாழ்வுக்காகவும், குடும்பங்களின் பாதுகாப்புக்காகவும், குடும்பங்களின் ஆசீர்வாதத்துக்காகவும் ஜெபிப்போம்.

2. கடன்பிரச்சனை, வேலையின்மை, பொருளாதார நெருக்கடி, வறுமை நிலை, இல்லக் கட்டுமான பணி தோய்வு, சம்பள இழப்புகள், விசா பிரச்சனைகள், வழக்குகள் நீங்கும்படியாய் ஜெபிப்போம்.

3. சிறுபிள்ளைகள் காக்கப்படவும், வாலிப பிள்ளைகள் கல்விக்காகவும், உயர்கல்வி, திருமணம், வேலைவாய்ப்புகள் பெற்றுக்கொள்ளவும் கடவுள் பயத்தோடும், இறை ஆசியோடும் வாழ மன்றாடுவோம்.

4. வாழ்க்கைத்துணை, குடும்ப அங்கத்தினர்கள், சகோதர, சகோதரிகள், பெற்றோர், பிள்ளைகள் நல்வாழ்வு பெறவும், குடும்பமாய் இறை நாமத்தை மகிமைப்படுத்தவும் மன்றாடுவோம்.

5. குழந்தை வேண்டியிருப்போர், குழந்தை பேற்றிற்காக காத்திருப்போர், நெடுந்தூரம் பயணப்படுவோர், கடினமான பணிகளைச் செய்வோர், தனிமையிலிருப்போர், வியாதியிலிருப்போர், சிறையிருப்பிலுள்ளோர் விடுதலையையும், இறை ஆற்றலையும் பெற்றுக்கொள்ள மன்றாடுவோம்.

## சிறப்பு இறைவேண்டல்

அன்புடையீர்,

உலகையே அச்சுறுத்திக்கொண்டிருக்கும் மிகப்பெரியத் துன்பம் கொரோனா என்னும் வைரஸ். இந்தக் கொடியக் கொள்ளைநோய் பலரின் வாழ்வை அழித்துள்ள நிலையில், உலகமே இந்த வைரஸின் துன்பத்தை எண்ணி அச்சமுடன் உள்ளது. இந்தத் துன்பம் அடியோடு அகலவும் மக்கள் அமைதியுடனும், நலமுடன் வாழவும் அனைவரும் தங்கள் இல்லங்களில் குடும்பமாகக் கூடி உபவாசத்துடன் இறைவேண்டல் செய்ய அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

### இறைவேண்டல் குறிப்புகள்:-

1. கொரோனா வைரஸின் வீரியம் செயல் இழந்து முழுமையாக அழிக்கப்படவும்.....
2. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளோர் முழுமையான விடுதலை பெறவும்.....
3. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோய் குறித்த பயம் அகன்றிடவும்......
4. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோய் பரவாமலிருக்கவும், அதற்கு மக்கள் முழுமையான ஆதரவு கொடுக்கவும்......
5. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோய் குறித்த விழிப்புணர்வுகள், முயற்சிகள் முழுமையான பலனைத் தரவும்......
6. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோயால் ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சரிவிலிருந்து நாடுகள் மீண்டுவரவும்......
7. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோய்க்கு எதிராக அரசு மேற்க்கொள்ளும் முயற்சிகள் வாய்க்கவும்......
8. மருத்துவமனையில் பணிசெய்கிற ஊழியர்களுக்காகவும் (Doctors, Nurses மற்றும் அனைத்து உதவி பணியாளர்களுக்காகவும்) மற்றும் சுகாதர துறையில் பணிசெய்கிற அனைத்து பணியாளர்களுக்காகவும்...

9. இந்தியா தேசத்திலும் நாம் வாழுகின்ற ஓமான் தேசத்திலும் இந்த வைரஸ் வேகமாக பரவிவருகிறது. அதன் வீரியம் குறைந்து தேசத்தின் அனைத்து மக்களும் பாதுகாக்கப்படவும்....

10. குடும்பமாக வீட்டில் இருக்கிற நாட்களில் கர்த்தரை அதிகமாக தேடவும், தேவ சமாதானம் குடும்பத்தை ஆளுகை செய்யவும்....

**இணைந்து மன்றாடுவோம்! இனிய வாழ்வு பெறுவோம்!!**

## அனுதின மன்னா – அக்டோபர் 2020

ஒவ்வொரு நாளும் வாசிக்கிறதற்காக ஒரு திருமறைப்பகுதி ஒவ்வொரு நாளுக்கும் தரப்பட்டுள்ளது, வாசித்து தியானித்து பயனடையுங்கள். குடும்ப ஜெபத்திற்கு இந்த பகுதியை பயன்படுத்துங்கள்.

| தேதி | நாள் | திருமறைப் பாடம் | அனுதின மன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| அக்டோபர் 1 | வியாழன் | ஆதி. 48:15-20 | ஆதி. 48:19 | மத்தேயு 5-7 |
| **அக்டோபர் 2** | **வெள்ளி** | **லூக்கா 2:25-33** | **லூக். 2:25** | **மத்தேயு 8-9** |
| அக்டோபர் 3 | சனி | நீதி. 20:20-30 | நீதி. 20:29 | மத்தேயு 10-12 |
| அக்டோபர் 4 | ஞாயிறு | 2கொரி. 8:1-8 | 2கொரி. 8:5 | மத்தேயு 13-15 |
| அக்டோபர் 5 | திங்கள் | அப். 1:6-14 | அப். 1:4 | மத்தேயு 16-17 |
| அக்டோபர் 6 | செவ்வாய் | எபேசி. 6:13-20 | எபேசி. 6:16 | மத்தேயு 18-20 |
| அக்டோபர் 7 | புதன் | அப். 4:32-37 | அப். 4:35 | மத்தேயு 21-22 |
| அக்டோபர் 8 | வியாழன் | அப். 4:23-31 | அப். 4:31 | மத்தேயு 23-24 |
| **அக்டோபர் 9** | **வெள்ளி** | **அப். 2:42-47** | **அப். 2:46** | **மத்தேயு 25-26** |
| அக்டோபர் 10 | சனி | 2கொரி. 8:1-7 | 2கொரி. 8:2 | மத்தேயு 27-28 |
| அக்டோபர் 11 | ஞாயிறு | அப். 3:1-10 | அப். 3:8 | மாற்கு 1-3 |
| அக்டோபர் 12 | திங்கள் | யோவான் 5:1-9 | யோவா. 5:8 | மாற்கு 4-6 |
| அக்டோபர் 13 | செவ்வாய் | 2சாமு. 9:1-13 | 2சாமு. 9:7 | மாற்கு 7-9 |
| அக்டோபர் 14 | புதன் | மத். 20:29-34 | மத். 20:34 | மாற்கு 10-13 |
| அக்டோபர் 15 | வியாழன் | யோபு 29:12-15 | யோபு 29:15 | மாற்கு 14-16 |

| தேதி | நாள் | திருமறைப் பாடம் | அனுதின மன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| **அக்டோபர் 16** | **வெள்ளி** | **மாற்கு 8:22-26** | **மாற்கு 8:24** | **லூக்கா 1** |
| அக்டோபர் 17 | சனி | லூக்கா 13:10-17 | லூக். 13:11 | லூக்கா 2-3 |
| அக்டோபர் 18 | ஞாயிறு | தானியேல் 3:8-18 | தானி. 3:17 | லூக்கா 4-5 |
| அக்டோபர் 19 | திங்கள் | மத். 27:11-25 | மத். 27:23 | லூக்கா 6-7 |
| அக்டோபர் 20 | செவ்வாய் | பிரசங்கி 11:6-10 | பிரச. 11:9 | லூக்கா 8-9 |
| அக்டோபர் 21 | புதன் | நெகே. 1:1-11 | நெகே. 1:11 | லூக்கா 10-11 |
| அக்டோபர் 22 | வியாழன் | அப். 18:4-11 | அப். 18:10 | லூக்கா 12-13 |
| **அக்டோபர் 23** | **வெள்ளி** | **மத். 14:28-36** | **மத். 14:36** | **லூக்கா 14-16** |
| அக்டோபர் 24 | சனி | நீதி. 23:1-9 | நீதி. 23:9 | லூக்கா 17-18 |
| அக்டோபர் 25 | ஞாயிறு | **சங்கீதம் 46:1-11** | **சங். 46:10** | **லூக்கா 19-20** |
| அக்டோபர் 26 | திங்கள் | சகரியா 8:14-23 | சகரி. 8:17 | லூக்கா 21-22 |
| அக்டோபர் 27 | செவ்வாய் | யாத். 23:1-9 | யாத். 23:5 | லூக்கா 23-24 |
| அக்டோபர் 28 | புதன் | கொலோ. 3:12-17 | கொ. 3:13 | யோவான் 1-3 |
| அக்டோபர் 29 | வியாழன் | யோபு 28:20-28 | யோபு 28:28 | யோவான் 4-5 |
| அக்டோபர் 30 | **வெள்ளி** | ஆதி. 13:7-12 | ஆதி. 13:8 | யோவான் 6-7 |
| அக்டோபர் 31 | சனி | கலா. 5:22-26 | கலா. 5:25 | யோவான் 8-9 |
| நவம்பர் 1 | ஞாயிறு | யோபு 23:1-17 | யோபு 23:14 | யோவா. 10-11 |
| நவம்பர் 2 | திங்கள் | ஆபகூக் 3:17-19 | ஆபகூக் 3:18 | யோவா. 12-13 |
| நவம்பர் 3 | செவ்வாய் | தானியேல் 3:8-18 | தானி. 3:17 | யோவா. 14-15 |
| நவம்பர் 4 | புதன் | மத்தேயு 8:5-13 | மத். 8:13 | யோவா. 16-17 |
| நவம்பர் 5 | வியாழன் | மத்தேயு 15:21-28 | மத். 15:28 | யோவா. 18-19 |
| **நவம்பர் 6** | **வெள்ளி** | **ஆதி. 12:1-8** | **ஆதி. 12:1** | **யோவா. 20-21** |

# ஆராதனை ஒழுங்குகள்

| | |
|---|---|
| பிரதி மாதம் முதல் தேதி | அருணோதய ஆராதனை<br>நேரம் : அதிகாலை 5:00 – 6:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |
| முதல் மற்றும் மூன்றாம் வெள்ளி | பரிசுத்த நற்கருணை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் |
| இரண்டு, நான்கு மற்றும் ஐந்தாம் வெள்ளி | மாலை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் |
| முதல் வியாழன் | இரவு ஜெபக் கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் |
| இரண்டாம் சனி | உபவாச ஜெபக் கூடுகை<br>நேரம் : காலை 10:30 – 1:00 |
| மூன்றாம் வியாழன் | பெண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் |
| மூன்றாம் வியாழன் | ஆண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |

திருமறை பள்ளி வகுப்புகள் - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 4:45 முதல் 5:45 மணி வரை நடைபெறும்.

பாடகர் குழு பயிற்சி - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 7:00 முதல் 8:00 மணி வரை நடைபெறும்


**Contact: Rev. Dr. N. Jesin**

**GSM : 9693 3489**

**Land Line : 2470 5784**

**E-mail : csitco@gmail.com**

**www.csitamilchurchoman.org**



**(For Private Circulation Only)**